**Kalanjiyam International Journal of Tamil Studies**
களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
https://ngmtamil.in/
DOI: https://doi.org/10.63300/kijts04052026

*Article Type: Original Research Article*

# Manimekalai and Buddhist Aesthetics

**M. Vignesh[1*], Dr. K. Jawahar[2],**

[1]*Research Scholar, Dept. of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur*

[2]*Research Guide, Assistant Professor, Dept. of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur.*

[*]Correspondence: vimalvickyma@gmail.com

**Received**: 22-01-2026; **Revised**: 24-01-2026; **Accepted**: 27-01-2026; **Published**: 01-02-2026

**Abstract:** Indian philosophical traditions are broadly classified in to two major categories namely Vaidika and Avaidia. Among these, Jainism, Buddhism and Lokayata belong to the Avaidika. Among these, Jainism, Buddhism, and Lokayata belong to the Avaidika tradition, as they denied the authority of Vedas. In Tamil intellectual traditions, diverse philosophical streams have emerged in different historical contexts such as Lokayata, Ajivaka, Jainism, Buddhism, Shaivism and Vaishnavism. Among these varied philosophical streams, Manimekalai occupies a distinctive place as a uniquely Tamil Buddhist philosophical text. It stands both in continuity with earlier aesthetic and ethical evaluations found within the Tamil tradition and deviate from them in several significant ways. In particular, the text Manimekalai, propounds Buddhist aesthetics from a woman-centric perspective. The ethical – aesthetic vision proposed in Manimekalai is shaped by several distinctive principles such as the doctrine of impermanence, the rejection of patriarchal authority, the renunciation of sensual desire, the annihilation of hunger and affirmation of equality among all living beings.

**Keywords:** Aesthetics, Buddhist aesthetics, Ethics, Aesthetics of Feminism, Equality of all living beings.

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# மணிமேகலையும் பௌத்த அழகியலும்

[1]**ம. விக்னேஷ்,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்.

[2]**முனைவர் க. ஜவகர்,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்.

**ஆய்வுச் சுருக்கம்**

இந்திய மெய்யியல் மரபில் வைதீக, அவைதீக என இருபிரிவுகள் உள்ளன. அவற்றுள் சமணம், பௌத்தம், உலகாயதம் அவைதீக மரபைச் சார்ந்தவை. தமிழ் மெய்யியல் மரபில் உலகாயதம், ஆசீவகம் தொடங்கி சமணம், பௌத்தம் என்றும் சைவம், வைணவம் என்றும் பல்வேறு போக்குகள் வரலாற்றுச் சூழலில் உள்ளன. அவற்றுள் மணிமேகலை தமிழின் தனித்தன்மையான பௌத்த மெய்யியல் பனுவலாக அமைகிறது. அழகியல் குறித்து தமிழ் மரபில் உள்ள முந்தைய மதிப்பீடுகளின் தொடர்ச்சியாகவும் அவற்றிலிருந்து மாறுபட்டும் உள்ளது. அதாவது பௌத்த அறவியலை பெண்ணை முதன்மைப் படுத்தும் நோக்கிலிருந்து அழகியலாக முன்மொழிகிறது. நிலையாமையும் ஆண்மறுப்பும், காமத்தை மறுத்தல், பசிப்பிணி நீக்கமும் உயிர்ச்சமத்துவமும் போன்ற நெறிகளில் தனித்துவமான அறவியலை அழகியலாகக் கொண்டுள்ளது.

**குறிச்சொற்கள்:**

அழகியல், பௌத்த அழகியல், அறவியல், பெண்ணிய அழகியல், உயிர்ச் சமத்துவம்

**முன்னுரை**

இலக்கிய உருவாக்கம் என்பது சமூக, அரசியல், பண்பாடு- சமயம், அறிவுமரபு முதலிய பல்வேறு கூறுகளின் பகுதியாக அமைகிறது. அதைப்போலவே இலக்கிய அழகியல் குறித்த சிந்தனைகளும் அமைகின்றன. அதாவது அழகியல் குறித்த கருத்தாக்கம், மதிப்பீடுகள் முதலியன சமய, மெய்யியல், அரசியல், பண்பாட்டுத் தன்மைகளுக்கு ஏற்ப மாற்றமடைகின்றன.

இந்தியச் சூழலில் அழகியல் குறித்து ரசம், தொனி, வக்ரோத்தி, ரீதி முதலிய கோட்பாடுகள் பேசுகின்றன. தமிழில் அழகியல் குறித்த பார்வையைத் தொல்காப்பியம் விரிவாகக் கூறுகிறது. குறிப்பாகத் தொல்காப்பியப் பொருளதிகாரம் விரிவாகக் கூறுகிறது. உவமை, உள்ளுறை, இறைச்சி, ஆகுபெயர், நாடகவழக்கு, மெய்ப்பாடு, செய்யுளுறுப்புகள் முதலிய பல்வேறு கூறுகளை இங்குக் கூறவியலும். இவ்வாறு தொல்காப்பியம் முன்வைக்கும் அழகியல் கூறுகளைத் தமிழ் அழகியலாக திருஞானசம்பந்தன், மருதநாயகம், தி.சு.நடராசன் போன்றோர் முன்வைக்கின்றனர். மெய்யியலின் ஒரு கூறாக அமைந்து அழகு என்பது என்ன, இயல்புகள், அழகியலின் வரையறைகள், மதிப்பீடுகள் முதலியன குறித்த ஆய்வாக அழகியல் அமைகிறது. அழகியல் மெய்யியலின் பிறகூறுகளான, இருப்பியல், அறிவாய்வியல், அறவியல் முதலிய கூறுகளுடன் தொடர்புடையதாகவும் அவற்றின்

பகுதியாக அமைந்து மனித அனுபவ உணர்வுவெளிக்கு நெருக்கமானதாகவும் அமைகிறது. ஒருவகையில் அழகியல் பிறகூறுகளின் உணர்வுவாயிலாக உள்ளது எனக் கூறலாம். கலை, இலக்கியங்கள் முதலியனவற்றுக்கு அடிப்படையாகவும் அதேநேரத்தில் அவற்றின் நோக்கங்களை வெளிப்படுத்தும் கருவியாகவும் அதன் பகுதியாக அமைந்து வேறற்ற தன்மையில் இயங்கும் நிலையிலும் அழகியல் முதன்மையாக அமைகிறது. அந்தவகையில் மணிமேகலையின் பௌத்த அழகியல் அமைவதை இக்கட்டுரை ஆய்கிறது.

**மெய்யியலும் அழகியலும்**

மெய்யியல் என்பது உண்மைகளைப் பற்றிய ஆய்வாகும். இந்திய மெய்யியல்களில் முதன்மையாக உலகம், இறை, ஆன்மா ஆகிய முப்பொருள்களைக் குறிட்ட ஆய்வு முதன்மையாக உள்ளது. வேதத்தை ஏற்பவர் வைதீகர் எனவும் மறுப்பவர் அவைதீகர் எனவும் அழைக்கப்படுகின்றனர். வைதீகத்தில் நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாம்சை மற்றும் வேதாந்த மரபுகளான அத்வைதம், துவைதம், விசிஸ்டாத்வைதம், சைவசித்தாந்தம் முதலியனவும் அவைதீகத்தில் சமணம், பௌத்த, உலகாயதம் ஆகியவைகளும் அடங்கும். மெய்யியல் ஆய்வில் பிரமாணங்கள் எனப்படும் அளவைகள் முதன்மையாக அமைகின்றன. காட்சி, கருதல், உவமம், ஆகமம், அருத்தாபத்தி, இயல்பு, ஐதீகம், அபாவம், மீட்சி, உண்டாம்நெறி ஆகிய பத்து அளவைகளில் ஆறை முக்கியமாகக் குறிப்பிட்டாலும் காட்சி, கருதல், ஆகமம் அல்லது மேற்கோள் அளவையை முதன்மையாகக் கொள்வது பொதுவாக உள்ளது. ஏனெனில் இந்த மூன்றை அடிப்படையாகக் கொண்டே மெய்யியல் பிரிவுகளை வகைப்படுத்தலாம். எனவே மெய்யியல் நிறுவலில் அளவைகள் அடிப்படையானவைகளாக அமைகின்றன.

அழகியல் அழகியலின் இயல்பு, கூறுகள், மதிப்பீடுகள் முதலியவற்றை உள்ளடக்கியதாக அமைகிறது. அழகியல் குறித்த கருத்தாக்கங்கள் அந்தந்த பண்பாடு, சமூக, அரசியல் சூழல்களில் இருந்து அமைகின்றன. பழம் கிரேக்க, ரோமானிய மரபுகளில் அழகியல் குறித்த ஆய்வுகள் இருப்பினும் மேலை மரபுகளில் 18ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு புதிய போக்குகள் வருகின்றன. கலை, இலக்கியங்களின் அழகியல் போக்குகள் சமூக, அரசியல், பண்பாட்டியல் மாற்றங்களின் பகுதியாக ஓவியம், இசை, இலக்கியம் என எல்லாவற்றிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. இருபதாம் நூற்றாண்டில் உருவவியல் போக்கும் புதுத் திறனாய்வும் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தின. அமைப்பியல், பின்னமைப்பியல் மேலும் பல புதிய திறப்புகளை உருவாக்கின. தமிழில் தொல்காப்பியம், சங்க இலக்கியம் தொடங்கி ஒரு நெடியமரபு இருப்பதைக் காணமுடிகிறது. அழகியல் என்பது எல்லாவற்றையும் வியந்து, ரசித்து கூறுவதுமட்டுமல்ல. அது மனித மனங்களுடன் ஒன்றிணைந்து ஓர் இயங்கியல் தன்மைகொண்தாகக் காணப்படும் ஒரு தத்துவமாகும். அழகியல் மனிதர்களின் உணர்வு தளத்தில் செயல்படக்கூடிய ஒன்றாகும். கலை, கவிதை, உவமை, உருவகம்,

இறைச்சி இவையெல்லாம் சேர்ந்தே அழகியல் என்கிற ஒரு பண்பை உருவாக்குகின்றது எனலாம். கலை என்றால் என்ன? எது கலைப் பண்பு? எது கவிதையை உருவாக்குகிறது என்பதைப்பற்றியும் அழகியல் திறனாய்வு ஆராய்கிறது. "அழகியல் என்பதனைக் 'குறி' (sing) என்று கொள்வோமானால் கலைகள் பற்றிய விளக்கம் அல்லது ஆய்வு, குறிப்பான் (signifier) ஆகின்றது; அழகு என்பது குறிப்பீடு (signified). நம் முன் அறியக் கிடக்கும் இக்குறிப்பீடு வழியாகத்தான், நாம் அழகியல் எனும் குறியை அறிந்துகொள்ள முடியும்" (தி.சு. நடராசன்: 2016:11). எனவே ,அழகியல் என்பது அழகின் இயல்புகள் குறித்த புறநிலை ஆய்வாக அமைகிறது. இந்த அழகியலைப் புறநிலையில் வைத்து ஆராய்தல் வேண்டும். அவ்வாறு ஆராய்கிறபோது அது ஒரு பொருளாக (object) எடுத்துக்கொள்ளப்பட்டு ஏற்கனவே இருக்கக்கூடிய அழகியல் மற்றும் உருவாக்குகின்ற அழகியல் இரண்டையும் ஒன்றிணைத்துப் புரிந்துகொண்டு அதை மனித உணர்வுத்தளத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். தமிழ் மரபின் அழகியலைக் கண்டடைவதன் மூலம் (சங்க இலக்கியம், தொல்காபியம்) காலத்து அழகியலையும் அதற்கு முந்தைய காலத்து அழகியலையும் கண்டைய முடியும் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகக் காணப்படுகின்றது. இவ்வாறு மெய்யியலின் பகுதியாக அழகியல் அமைந்து அறவியலின் வெளிப்பாட்டுக் கலையியலாக அழகியல் அமைகிறது. இந்த நிலையில் மணிமேகலையின் அழகியல் அறவியலினூடாக அமைவதைக் காணமுடியும்.

**மணிமேகலை - சமூக வரலாற்றுப் பின்புலம்**

மணிமேகலை காப்பியம் சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாகும். ஒரு படைப்பு உருவாவதற்கான சமூக, அரசியல், வரலாற்று காரணங்கள் இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது. மணிமேகலை **சங்ககாலத்திற்குப் பிறகு வந்த பிற்காலத் தமிழ் சமூகத்தை** பிரதிபலிக்கிறது. சிலப்பதிகாரம் அறம் சார்ந்த கருத்துக்களைக் கூறியிருந்தாலும் தத்துவத்தளத்தில் அதிக கவனம் செலுத்தவில்லை. ஆனால் மணிமேகலை ஒரு மெய்யியலுக்கு முதன்மையளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதைப்போலவே சிலப்பதிகாரத்தைக் காட்டிலும் மணிமேகலை பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது. மணிமேகலை துறவியாகி சிந்தனையாளர் ஆகிறார். இது பெண் சுயமரியாதையின் வெளிப்பாடு. அக்கால கட்டத்தின் வறுமை, அறம் தாழ்ந்த சமூக அமைப்புகள் உருவாகியிருத்தல் போன்றவைகளும் பசிப்பிணி தீர்த்தல், பெண் விடுதலை, பரத்தையர் ஒழிப்பு போன்றவற்றை முதன்மைப்படுத்துதல் என்பவையும் மணிமேகலை உருவாக்கத்திற்கான வரலாற்றுக் காராணங்களாகும். வறுமை ஒழிக்கப்பட்டு அறம் தழைக்க வேண்டும். அனைவரும் துன்பத்திலிருந்து நீங்கி அமைதியான முறையில் ஏற்றத்தாழ்வற்று சமத்துவத்துடனும், சகோதுரத்தவத்துடனும் வாழ வேண்டும் என்பது மணிமேகலையின் அறம். இங்கு அறவியல் கருத்தாக்கம் இயங்குவதற்கு பௌத்தம் அடிப்படையாக அமைகிறது. அதாவது

சமயங்களின் அறவியல் கருத்துகள் மக்கள் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இவ்வாறான தன்மையில் இருந்து சாத்தனார் பௌத்த மதத்தை தேர்ந்தெடுத்திருக்கிறார். இவர் காலத்தில் வருணாசிரம அமைப்பு, சாதிய, பாலின ஏற்றத்தாழ்வு போன்றவைகள் வேரூன்றிய காலமாக இருந்துள்ளது என்பதையும் அறிய முடிகிறது. இவ்வாறான பின்புலத்தில் இருந்து சாத்தானார் மணிமேகலைக் காப்பியத்தை உருவாக்கியிருக்கிறார். அதாவது வறுமை, வருணாசிரம அமைப்பு, சாதிய, பாலின ஏற்றத்தாழ்வு, பரத்தையர் தொழில், பெண்ணடிமை போன்றவைகள் நீக்கப்பட்டு அனைவரும் நல்லறத்துடன் வாழ வேண்டும். அந்தவகையில் பௌத்த அறவியல் கருத்துக்களை முதன்மையாகக் கொண்டு மணிமேகலை தோன்றியதாகக் கருத இயலும்.

**மணிமேகலையின் பௌத்த அழகியல்**

மணிமேகலையின் பௌத்த அழகியல் என்பது, அறவியலை அடிப்படையாகக் கொண்டது. அதாவது பௌத்த அறவியலைத் தன் அழகியலாகக் கொண்டிருக்கிறது. அது தமிழ்சார்ந்த அழகியலின் கூறுகளுடன் அமைகிறது.

**நிலையாமையும் ஆண்மறுப்பும்**

மணிமேகலை மரபார்ந்த கூறுகளைக் கேள்வி கேட்டு அவற்றை மறுக்கிறது. ஆனால் அழகியல் தன்மையில் தமிழின் மரபார்ந்த கவிதையாக்க முறையியலையே பின்பற்றியிருந்தாலும் அதே வேளையில் அவற்றை மீறவும் செய்கிறது எனலாம். குறிப்பாக இயற்கை வருணனை, பெண்ணை டிவமைத்தல் ஆகியவை மரபார்ந்த தன்மையிலே இருப்பதைப் பார்க்க முடிகிறது. துறவியாக இருக்கும் பெண்ணின் உடலை வடிவமைப்பதென்பது சங்க இலக்கிய மரபின் தொடர்ச்சியாகும். (03: 151 – 158)· மலர்வனம் புக்கக் காதையில் மணிமேகலையின் நடை, அழகு ஆகியவைக் கண்டு அன்னம், கிளி, மயில் போன்ற பறவைகளுடன் ஒப்பிட்டு கூறுவதைப் பார்க்க முடிகிறது. அதே போல் பளிக்கறை புக்க காதையில்,

**“மாதர் நின்கண் போதெனச் சேர்ந்து**
**தாதுண் வண்டினம்” (4: 9-10)**

என்று மணிமேகலையின் கண்கள் மீது வண்டுகள் நீலமலரென நினைத்து தேன் உண்ண வருகின்றன என்று ஒரு கூற்று வருகிறது. இது துறவியாக இருக்கும் ஒரு பெண்ணை இவ்வாறாக வடிவமைத்தல் என்பது பழைய தமிழ்மரபின் தொடர்ச்சியாக எளிய பெண்ணாக வடிவமைப்பதைக் காட்டுகிறது.

**“என்னமர் காதல நிராகுல நீங்கிவன்**

**தன்னடி தொழுதலுந் தகவென வணங்கி**

**அறைபோய் நெஞ்ச மவன்பா லணுகினும்**

**இறைவளை முன்கை யீங்கிவன் பற்றினும்**

**தொன்று காதலன் சொல்லெதிர் மறுத்தல்” (18: 128 - 132)**

என்று பெண்ணின் நிலை என்பது கணவனைத் தொழுது வணங்கி வாழ்தல் எனும் நிலையை முன்வைத்து, அதை மீறி இந்த வாழ்வு நிலையாமையை முன்வைத்து அதைக் கடக்கிறது.

பிறத்தலும் மூத்தலும் பிணிப்பட் டிரங்கலும்

இறத்தலு முடைய திடும்பைக் கொள்கலம்

மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து

மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன் (18: 136-139)

என்று, நிலையாமையை உணர்ந்து நல்லறத்தைச் செய்தல் என்பதையே அழகியலாக முன்வைக்கிறது. சங்க அகமரபும் அதனைத் தொடர்ந்து வரும்போக்குகளும் பெண்ணுடலை ஆணாதிக்க உடைமைக் கருத்தாக்கநிலையில் இருந்து பாலியல் நுகர்வுடலாகப் பார்க்கும் தன்மையை முன்வைக்கின்றன. அதைப்போலவே ஆணின் சார்புநிலையில் இருந்து நிலையாமைக் கருத்தை முன்வைத்தும் பெண் தடையாக அதற்கு இருக்கிறாள் எனும் நிலையிலான பார்வைகளும் பிற்கால மரபுகளில் தொடர்வதைக் காணமுடிகிறது. இவ்வாறான போக்குகளுக்கு மறுப்புநிலையில் பெண்ணின் தன்னிச்சையான சுதந்திரவெளியை பௌத்த அறவியலை அழகியலாக மணிமேகலை முன்வைக்கிறது. அதாவது உடல்நிலையாமையை முன்வைத்து ஆணுடலை வெளியேற்றும் நிலையில் அறமுரைத்தலை முன்வைக்கிறது.

தண்ணறல் வண்ணந் திரிந்துவே றாகி

வெண்மண லாகிய கூந்தல் காணாய்

……………………………………

கழுநீர்க் கண்காண் வழுநீர் சுமந்தன

இலவிதழ்ச் செவ்வாய் காணா யோநீ

புலவுப் புண்போற் புலால்புறத் திடுவது (20:41-52)

என்று பெண்ணுடலை நுகர்வாகப் பார்க்கும் ஆண்மையச் சிந்தனையை நிலையாமை வலியுறுத்துவதன்மூலம் ஆணுடலை மறுக்கும் தன்மையாய் வெளிப்படுகிறது. அதாவது மனைவி, கணிகை என்ற இருமை எல்லைக்குள் பெண்ணுடலை ஆண்மையச் சமூகம் முடக்குகிறது. இந்த

வரையறைகளை பௌத்த அறவியலினூடாகத் துறவின்மூலம் மணிமேகலை மீறுகிறது. இதைப் பௌத்த அழகியலாக முன்வைக்கிறது. தனக்கு முந்தைய மற்றும் பிந்தைய தமிழ், கலை, இலக்கிய, அறிவுமரபின் ஆண்மையப் போக்குகளை மீறுவதாக அமைகிறது.

**காமத்தை மறுத்தல்**

காமத்தை வெல்லுதல் என்பது பௌத்தத்தில் மிக முக்கியமான ஒன்றாகும். காமம் துக்கத்துக்குக் -காரணமாகிறது. எனவே அதைவிடுவதை வலியுறுத்துகிறது. உதயணன் தன்னைப் பழித்துப் பேசியிருந்தாலும் அவன் பின்னால் மனது செல்கிறது எனக் கூறும் மணிமேகலை,

**"காமற் கடந்த வாய்மையள் என்றே" மணி (5; 07)**

**"கற்புத் தானிலள் நற்றவ உணர்விலள்**

**………………………………**

**புதுவோன் பின்றைப் போனதென் னெஞ்ச**
**மிதோ வன்னாய் காமத் தியற்கை**
**யிதுவே யாயிற் கெடுகதன் றிறமென" மணி.(5; 86-91)**

என்று இதுவே காமத்தின் இயற்கையாயின் அதை வெல்வேன் என்கிறாள். இங்கு சமூகநிறுவனம் வழங்கும் பெண்ணுக்கான மனைவி, கணிகை என்ற இரட்டைச் சிறையிலிருந்து காமத்தை வெல்வதன்மூலம் வெளியேறுகிறாள் மணிமேகலை. புத்தர் காமத்தை வென்றவன் என்று பல இடங்களில் வருகிறது. காமம் (காதல்) என்பது துன்பமானது என்பதைப் பிற உடல்களிலிருந்து புரிந்து கொண்டு அவற்றிலிருந்து நீங்குதலே அறமானதாகும் என்ற உணர்வை பௌத்தம் மையப்படுத்துகிறது. எனவே பௌத்தம் இவ்வுடல், உலகம் என்பது நிரந்தரமற்றதல்ல மாறிக்கொண்டே இருக்கக் கூடியது என்பதை முன்வைக்கிறது. அதுவே அதன் அழகியலகக் காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில், " கண்ணகி ஆணாதிக்கச் சமூகத்தின் அனைத்து விதிகளுக்கும் உட்பட்டவள். தனது ஒடுக்குதலையே தனது அறமாகக் கொண்டவள். தனது கணவன் என்ற ஆணுக்குச் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துவதன்மூலம் இச்சமூகம் அவளுக்கு அளிக்கும் புனைவு பெருமையான பத்தினி என்ற பெயரிடுதலைப் பெற விரும்புபவள்"(பிரேம்-ரமேஷ், 2000: 99-100) ; மணிமேகலையோ தன் பிறப்படையாளத்தைத் துறக்கிறாள். தான் பெண் என்பதால், தனக்கு விதிக்கப்பட்ட காதல், காமம் என்பனவற்றையும் துறக்கிறாள். அவள் முன் பல்வேறு சாத்தியப்பாடுகள் உள்ளன. ஆனால் அவள் தெளிவாக ஒன்றைத் தேர்ந்தெடுக்கிறாள். ஆணாதிக்க மதங்களும், ஒழுக்கங்களும் பெண்களுக்கு ஞானமும், அறிவும் உரிமையில்லையெனத் தீர்ப்பு வழங்கிய நிலையில், மாற்று மதத்தை, மார்க்கத்தை அவள் கண்டடைகிறாள். இந்தியப் பெருமரபுகள் பெண்களுக்கு மறுத்த ஞானத்தேடல், துறவு, அறம், தத்துவ ஆய்வு என்ற அனைத்தையும் அவள் கையகப்படுத்துகிறாள். இதன்மூலம் இந்திய, தமிழ்ப் பெருமரபுகளின் பெண் அடையாளத்தை அவள்

கடந்து வெளியேறுகிறாள்"(மேலது.:101-102) எனக்கூறும் பிரேம்-ரமேஷ் ஆகியோரின் பார்வையை ஒப்பிட்டு நோக்க, சிலப்பதிகாரம் குடும்ப அமைப்புக்குள்ளிருந்து அதன் அரசியலை முன்வைப்பதாகவும் மணிமேகலை குடும்ப அமைப்பு முறையை எதிர்த்த சுதந்திர வெளியை பௌத்த நெறியில் இருந்து முன்வைப்பதாகவும் கருதமுடியும். மணிமேகலை மேல் தளத்தில் கவிதை, காப்பிய வடிவம் என்றிருந்தாலும் அதன் அடித்தளத்தில் பௌத்த மெய்யியலின் அழகியல், அறவியல் கூறுகளை உள்ளடகியுள்ளது என்பதைப் பார்க்க முடிகிறது.

**பசிப்பிணி நீக்கமும் உயிர்ச் சமத்துவமும்**

மணிமேகலை பசிப்பிணி போக்கலையும் உயிர்ச் சமத்துவத்தையும் பௌத்த அறவியலாக முன்வைக்கிறது.

**"மடுத்தத்தீக் கொளிய மன்னுயிர்ப் பசிகெட**
**எடுத்தனள் பாத்திர மிளவங்கொடி தானென்"(12:120-121)**

என்று, மிகுந்த தீயினால் கொள்ளப்பட்டதுபோல் உயிர்களின் பசியானது அழிவதற்கு, மணிமேகலை அட்சய பாத்திரத்தை எடுக்கிறாள் எனக் கூறுகிறது. இது அடிப்படையாகிய உணவு வழங்கலை அறமாக முன்வைக்கிறது. அதைப்போலவே,

**"வயிறுகாய் பெரும்பசி மலைக்கும் என்றலும்" (14: 06)**

என்று, பாத்திர மரபு கூறிய காதையில் வயிற்றைக் காய்கின்ற பசி வருத்தும் எனக் கூறி பசிப்பிணி போக்கலை முதன்மையான அறமாகக் கூறுகிறது.

**"வாங்குகை வருந்த மன்னுயி ரோம்பலின்**
**மக்களு மாவு மரஞ்சேர் பறவையும்**
**தொக்குட னீண்டிச் சூழ்ந்தன விடாஅ**
**பழுமரத் தீண்டிய பறவையின்**
**பழுமரத் தீண்டிய பறவையி னெழூம்" (14; 21 - 26)**

என்று மனிதர்களுக்கு மட்டுமன்றி எல்லா உயிர்களுக்கும் பசியைப் போக்கக்கூடியதாக அமுதசுரபியை முன்வைத்து நடைமுறைசார் அறவியலை முன்வைக்கிறது. காயசண்டிகையின் பசிப்பிணி மட்டுமல்ல எல்லா உயிர்களின் பசிப்பிணியையும் போக்கும்நிலையில் அமைகின்றது. எனவே அறம் என்பது எவ்வுயிர்க்கும் இரங்கலும் பசிப்பிணிபோக்கலும் கருணையும் முதலியன மணிமேகலையில் முன்வைக்கப்படுகிறது.

மணிமேகலை பௌத்த அழகியிலை இறக்கம், கருணை இவை முக்கிய கூறாகப் பார்க்கப்படுகின்றது. அதைப்போலவே, மணிமேகலையில் பெண்களை முதன்மைப் படுத்தி, பெண்களின் வழியாக அறவியலைச் செயல்படுத்தும்நிலையில் தனித்துவமாக அமைகிறது.

**"அறிவுஞ் சால்பும் அரசியல் வழக்கும்**
**செறிவளை மகளிர் செப்பலு முண்டோ**
**………………………………………**
**மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து**
**மிக்கோய் இதனைப் புறமறிப் பாராய்" (04: 109-121)**

என்று சுதமதி உதயணனுக்கு அறத்தைக் கூறுகிறாள். இதை ஒரு மாற்று அழகியலாக முன்வைக்க முடியும். தமிழ் மரபில் மன்னவருக்குப் பெண் அறிவுரை கூறுதல் என்பது ஔவையார் போன்ற மிகச் சொற்பமானவரே உள்ளனர். ஆனால் மணிமேகலை எளியபெண் நேரடியாக அரசமைப்புக்கு அறம்கூறுவதை முன்வைக்கிறது. இந்த உடல் எத்தன்மையுடையது என்பதையும் மக்கள் யாக்கையாக அது எவ்வாறு உள்ளது என்பதையும் எடுத்துக்கூறுகின்றது. அதைப்போலவே மணிமேகலை, உதயணன் இறந்தபின் இராசமாதேவியின் வருந்தும் சமயத்தில்,

**"உடற்கழு தனையோ வுயிர்க்கழு தனையோ**
**…………………………..**
**எவ்வுயிர் காயினு மிரங்கல் வேண்டும்" (23: 72-79)**

என்று, 'உடல் – உயிர் இரண்டில் எதற்கு அழுகிறாய், உடற்கு அழுதால் புறங்காட்டில் இட்டதுயார்? உயிர்க்கு அழுதால் செய்வினைவழியே உயிர்புகுமிடம் அறிய இயலாது. நின் மகனது உயிர்க்கு அன்புடையை ஆனால் எல்லா உயிருக்கும் இரங்கல் வேண்டும் என்றும் அதுவே அறமாகும்' எனக் கூறுகிறது. இவ்வாறே,

**"அறமெனப் படுவ தியாதெனக் கேட்பின்**
**மறவா திதுகேண் மண்ணுயிர்க் கெல்லாம்**
**உண்டியு முடையு முறையுளு மல்லது**
**கண்ட தில்லெனக் காவலனுரைக்கும்" (25:228- 231)**

என்று புண்ணிய ராசனுக்கும் மணிமேகலை அறம் கூறுகிறாள். இவ்வுலகில் வாழும் எல்லா உயிர்களுக்கும் அத்தியவசியமான உணவு, இருப்பிடம், உடை இது மூன்றும் அவசியமான ஒன்று. எனவே இதைக் கொடுப்பதே சிறந்த அறமாக இருக்க முடியும் என்பதை கூறுவதன் மூலம் எல்லா உயிர்களிடத்தும் அருள் செய்யும் அறத்தையே பௌத்த அழகியலாக முன்வைக்கிறது.

**முடிவுரை**

மணிமேகலையின் பௌத்த அழகியல் என்பது தமிழ் வரலாற்றில் கலை, இலக்கிய, மெய்யியல் மரபில் பெண்களுக்கு வரையறுக்கப்பட்ட எல்லைகளைக் கடப்பதாக முன்வைக்கப்படுகிறது. அதாவது மனைவி, கணிகை என்று பெண்களுக்கு வரையறுக்கப்பட்ட வரலாற்று இரட்டைச் சிறையிலிருந்து விடுதலைபெற்று சமூகப் பொதுவாழ்வு, மெய்யியல், அரசியல், பண்பாடு, சமயம்

முதலிய எல்லாத் தளங்களிலும் பெண்ணின் சுதந்திரவெளியைக் கட்டமைக்கிறது. இதனால் ஆணாதிக்க, தந்தைவழிச் சமூகப் பண்பாட்டு நிறுவனத்திற்கு எதிர்நிலைப் பனுவலாக அமைகிறது. இவ்வாறான அனைத்துப் புரட்சிகர வரலாற்றுச் செயல்பாடுகளையும் பௌத்த சமயத்தின், மெய்யியலின், அறவியலினூடாக முன்வைக்கிறது. பெண்ணைச் சமூக, பண்பாட்டு வாழ்வியல் மாற்றத்தின் கருவியாகப் படைக்கிறது. இன்னும் ஒருபடி மேலே சென்று மனிதர்களுக்கு மட்டுமன்றி எல்லா உயிர்களிடத்திலும் அன்பு, கருனை இரக்கம் முதலியவற்றை முன்வைப்பது, பசியை ஒழிப்பது முதலிய செயல்பாடுகளைப் பெண்வழியாக முன்வைப்பதன்மூலம் உயிர்ச் சமத்துவப் பார்வையைப் பெண்வழியாகவே நிகழ்த்தவேண்டும் என்பதை வலியுறுத்தும் பெண்ணிய அழகியல் பிரதியாக அமைகிறது. இத்தகு அறவியல் பார்வையை பௌத்த அழகியாலாக எடுத்துக்காட்டுகிறது. எனவே மணிமேகலையின் பௌத்த அழகியல் என்பது பெண்விடுதலையை அடிப்படையாகக் கொண்டு, சமூக மாற்றத்துக்கான அறவியலை பௌத்த அழகியலாக முன்வைப்பதாக அமைகிறது என்று கூறவியலும்.

**துணையன்கள்:**

1. மணிமேகலை, (டாக்டர் உ.வே.சாமிநாதையரவர்கள் பதிப்பு), டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை: 2013 (ஒன்பதாம் பதிப்பு).
2. பிரேம்- ரமேஷ், சிதைவுகளின் ஒழுங்கமைவு- காவ்யா பதிப்பகம், சென்னை: 2000.
3. நடராசன், தி.சு., தமிழ் அழகியல், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை. 2016